மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள்

சென்னை–6

ந.க.எண். 2283 ஊ1/2022 நாள். 03.11..2022

பொருள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தொன்மையின் சிறப்பு குறித்த தகவல்களை அரசுப் பள்ளி பட்டாதாரி ஆசிரியர்களுக்கு தொல்லியல் துறையுடன் இணைந்து பயிற்சி அளித்தல் – ஆசிரியர்களின் பெயர் பட்டியல் தயார்செய்து இவ்வியக்கத்திற்கு அனுப்ப முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு தெரிவித்தல் – சார்பு.

பார்வை பள்ளிக் கல்வித்துறை அரசாணை (நிலை) எண்.168 நாள்.30.09.2022.

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தொன்மையின் சிறப்பு மற்றும் தமிழகமெங்கும் விரவியிருக்கும் தொல்லியல் தலங்கள் குறித்த தகவல்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் வண்ணம் தொல்லியல் துறை வாயிலாக தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 6 நாள்களுக்கு உண்டு உறைவிடப் பயிற்சியாக நடைபெற உள்ளது. இப்பயிற்சிக்கு ஒரு குழுவிற்கு 40 ஆசிரியர்கள் வீதம் 25 குழுவாக மொத்தம் 1000 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, மேற்காண் பொருள் சார்ந்து மாவட்டங்களிலுள்ள உள்ள அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளில் ஆர்வமும் அனுபவமும் உள்ள ஆசிரியர்கைளைத் தேர்வு செய்யுமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன

முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பயிற்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் ஆசிரியர்களைத் தேர்வுசெய்வதில் மிகுந்த கவனத்துடன் தங்கள் மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுடன் கலந்தலோசித்து ஆர்வமுள்ள 40 ஆசிரியர்களின் பெயர் மற்றும் விவரங்களை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள Google Sheet ;ன் விவரங்களின்படி தயார் செய்து இவ்வியக்கத்திற்கு 11.11.2022 அன்று மாலைக்குள் அனுப்புமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்

நகல்

ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம்,சென்னை – 6

இணைப்பு

ஆசிரியர்களைத் தேர்வு செய்தல்

2பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட செயல்பாடுகளில் ஆசிரியர்கள் பங்குபெற்றிருக்க வேண்டும்

1. பள்ளிகளில் மன்ற செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டுருக்க வேண்டும்
2. மாணவர்களை களப்பயணம் அழைத்துச் சென்ற அனுபவம் இருக்க வேண்டும்
3. மாணவர்கள் பலவகையான போட்டிகளில் பங்கேற்கச் செய்து பரிசு பெற பங்கு அளித்துள்ள அனுபவம் இருக்க வேண்டும்
4. தமிழ் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், தொன்மை மற்றும் அதன் சிறப்புகளை வெளிக்கொணர்வதில் பங்காற்றிய அனுபவம் வேண்டும்.
5. தொல்லியல் சார்ந்த தளங்களில் கட்டுரைகள் எழுதியிருக்க வேண்டும்,
6. தொல்லியில் மற்றும் வரலாறு பாடங்களில் ஆர்வமும் விருப்பமும் , உள்ளவராக இருத்தல் வேண்டும்

தேர்வு செய்யப்படவேண்டிய ஆசிரியர்களின் விவரம் மாவட்ட வாரியாக

| S.No | DISTRICT NAME | No. of Teachers to be Selected ( 6th to 10th Std Handling B.T. Teachers from only Govt... Schools ) |
|---|---|---|
| 1. | Thiruvallur | 40 |
| 2. | Chennai | 40 |
| 3. | Ranipet | 20 |
| 4. | Kanchipuram | 40 |
| 5. | Chengalpattu | 40 |

| | | |
|---|---|---|
| 6. | Vellore | 20 |
| 7. | Krishnagiri | 40 |
| 8. | Thirupattur | 20 |
| 9. | Thiruvannamalai | 40 |
| 10. | Dharmapuri | 40 |
| 11. | Villupuram | 40 |
| 12. | Salem | 40 |
| 13. | Kallakurichi | 40 |
| 14. | Cuddalore | 40 |
| 15. | Nilgiris | 40 |
| 16. | Erode | 40 |
| 17. | Namakkal | 40 |
| 18. | Perambalur | 40 |
| 19. | Mayiladuthurai | 40 |
| 20. | Karur | 40 |
| 21. | Coimbatore | 40 |
| 22. | Tirupur | 40 |
| 23. | Trichy | 40 |
| 24. | Ariyalur | 40 |

| | | |
|---|---|---|
| 25. | Thanjavur | 40 |
| 26. | Thiruvarur | 40 |
| 27. | Nagapattinam | 40 |
| 28. | Pudukottai | 40 |
| 29. | Dindigul | 40 |
| 30. | Theni | 40 |
| 31. | Madurai | 40 |
| 32. | Sivagangai | 40 |
| 33. | Virudhunagar | 40 |
| 34. | Ramanathapuram | 40 |
| 35. | Thenkasi | 40 |
| 36. | Thoothukudi | 40 |
| 37. | Tirunelveli | 40 |
| 38. | Kanyakumari | 40 |
| 39. | Total | 1460 |